இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2015–16

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 12.01.2016

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள்உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின. மாலையில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் மாலை உணவருந்து ஓய்வெடுக்கத் துவங்கின. எதிர்வரும் பொங்கல் திருவிழா முன்னிட்டு பாகன்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.



